149

வ்யயஹு கார்த்திகை

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 11

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

THE REGISTRAR OF BOOKS
16 JAN 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

ப்ரசுரிக்குமிடம்:

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

3L
Q22 வ211, N4
N465.11.

வர்ஷச் சந்தா:
ரூபா 3—0—0

November 1946
Vol. 5 No. 11

18227

விஷய ஸூசிகை.

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	236
2.	முமுக்ஷுவுக்கு விரோதித்யாகம் எங்ஙனே கூடும்?....	240
3.	திவ்ய ஹவிஸ்	243
4.	கலி காலத் தியல்பு திருப்புகழ்	247
5.	ஸ்ரீஸ்துதி	251
6.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	522
7.	செய்திகள்	253
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	255

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டு மென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதாய் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5 | வ்யய ௵ கார்த்திகை ௴ | ஸஞ்சிகை 11

1 8 JAN 1947
MADRAS

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

—:-0-:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாலக்ஷ்ம்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

——0——

ஸ்ரீ

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[ஸ்ரீ. உப. A V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம், 5, ஸஞ்சிகை 9, பக்கம் 195-ன் தொடர்ச்சி]

விவேகன்:—[மிக்க ஆச்சர்யத்துடனும் ஸம்ப்ரமத்துடனும்] இதென்ன! இங்கே மூக்குக்கு இன்ப மயக்கம் தரும் வாஸனையும், உடம்புக்கு ம்ருது ஸ்பர்ஸமான இனிய காற்றும் வீசுகிறதே!

"உத்யாநாநாம் அவித்யாதரமிதுநஜநிதாஶ்வாஸக்ருந்தி ஹேதோ:
த்ருஷ்டாத்ருஷ்டாவசேஷா த்ருஶ்யம்பவதி நிஶ்வாஸ விஶ்வாஸஹேதி: ।
நீஹாரக்ஷிப்ரஜஜ்ஜ்ருதீவத்ரநவத்ர ந்யூஷ்கஷ்டமீ கோத்ரீ
நைவாஸீ ஹுணவாஸீவரிமஜமுகஸித: ஸ்வைதேமதவாத: ॥"

இங்குள்ள உத்யாநவநங்களில் வீசும் ஸுக ஶீதமும் பரிமள முடையதும் ம்ருதுவுமான காற்று, இந்த்ரியங்களுக்குக் காமமோஹத்தை விளைப்பதா யிருக்கிறது. இந்த இடம் நேபாள தேஸ ப்ராந்தம். ஸ்வாமியின் உத்தர தேஸ யாத்ரையில், இந்தத் தேசங்களும் பரிசிதமாயிருக்கலாம். இந்த ச்லோகத்தில் ச்ருங்கார வர்ணநம் அத்யத்புதம். கந்தமாதந வநத்தின் ஸமீபத்திலுள்ள இந்த ஹிமயகிரி உத்யாநவநங்களும் கந்தமாதநமாகவே (பரிமளத்தால் காம ஸம்ப்ரமம் விளைப்பதாகவே) இருக்கிற தென்று விவேகருக்கு அத்புத ரஸம். இந்தத் தோட்டங்களின் அழகு பரிமளம் மந்தமாருதம் இவைகளைப் பார்த்து, கந்தமாதந வநத்தையும் விட்டு விட்டு, வித்யாதர மிதுநங்கள் இங்கே தங்கள் காம போக விஹாரங்களுக்காக வருகிறார்கள். அவர்கள் மானிடர் கண்ணுக்குப் படாத அத்ருச்ய ரூபரானதால், அவர்கள் மிதுநங்களாக இங்கே விஹரிக்கத் தடையில்லை. மற்ற தேவ வநங்களில் இவர்கள் தேவர்களுக்கு அத்ருச்யரல்லாததால், தம்பதி போகங்களுக்கு ஏகாந்தமான இடங்கள் தேடவேணும். இங்கே அவர்களுக்கு ஏகாந்தம் லோகாந்தம் என்கிற பேதமில்லை. எல்லாம் ஏகாந்தமே. வித்யாதர மிதுநங்கள் இங்கே ஜோடியாக வருகிறார்கள்; கூடி விஹரிப்பதற்கே வருகிறார்கள். வித்யாதர மிதுநம் காம வித்யையில் தேர்ந்தவர். 'வித்யாதர மிதுநஜநி'. 'வித்யா' என்பது ப்ரம்ஹ வித்யையையும் சொல்லும். ஸ்த்ரீ புமான்கள் சேர்ந்து ப்ரம்ஹ வித்யையில் அப்யாஸம் செய்தால், இருவரும் ப்ரம்ஹரதி இன்பத்தை ஸுகமாய் அநுபவிக்கலாம். அந்த ரதியில் ச்ரம மென்பதே ஏற்படாது. 'பயிலவினிய நம் பாற்கடல் சேரும் பரமனை' என்றபடி, பயிலப் பயில, அப்யஸிக்க அப்யஸிக்க, மேலும் மேலும் இனிப்பும் உத்ஸாஹமும் பலமும் பெருகும். அதில் களைப் பென்பதே உண்டாகாது. மிதுநங்களின்

நிலையம்

ப்ராக்ருத போக ரதியோ ச்ரமத்தை மிகுதியாகக் கொடுக்கும். 'ஶ்ரம திவஸி வெதநாபநுத்தி ஸுகாவாநாம்' என்று மாக கவி, 'தீர்க்கமான போக ரதியால் ச்ரமமே கனத்து வருத்த முண்டாகிப் பின்பு தம் ஸஹசரரை விட்டு விட்டுத் தனியே பகவானால் அணைக்கப்பட்டு நித்ரை செய்தபோதுதான் துக்கம் கலக்காத ச்ரமாபஹரமான ஸுகம் கிடைத்தது' என்று காட்டுகிறார். ப்ரம்ஹத்தின் பரிஷ்வங்கம்தான் ஸ்வரூபத்துக்கு ஏற்றது; தேஹ ச்ரமத்தையும் போக்கிக் கேவல ஸுகமயமான அநுபவத்தைத் தருவது. 'ஸுரதஶ்ராந்தி' என்பதால், இவர்கள் காம வித்யையில் தேர்ச்சி பெற்றுத் தீர்க்க காலம் விஹரித்ததின் பயன் ச்ராந்தியே. இவ்வளவு ச்ராந்தி வந்தும், மறுபடியும் ச்ரமம் தரும் இந்த விஹாரத்திலேயே மூழ்க ஆசை. உடம்பு ச்ரமமோ அதிகமாய் உள்ளது. இந்த ஸமயத்தில் இவர்கள் ச்ரமத்தைப் போக்கடிக்கக் கூடிய குளிர்ந்த மந்த மாருதம் வீசுகிறது. இந்த ரதி ச்ரமத்தையெல்லாம் அந்தக் காற்று போக்கி விடுகிறது. அந்த மந்தமான வாதம் இவர்களுடைய ரதி ச்ராந்திக்கு அபக்ராந்தி ஹேது வாகிற தென்கிறார். குளிர்ந்த மந்தமாருதம் ச்ரமத்தைப் போக்கவே, அவர்கள் திரும்பவும் பழைய போக விஹாரத்தில் இறங்கி விடுகிறார்கள். இந்தக் காற்றில் ச்ரமம் நீங்கித் திரும்பவும் திரும்பவும் போகத்தில் மூழ்கவே இந்த வித்யாதர ஜோடி இங்கே வருவது.

'நீஹாரதுஷாரை:'— ஹிமய மலை ப்ராந்த வநம், பனித் துளிகளால் காற்றின் (சரீரம்) குளிர்ச்சி பெற்றிருக்கிறது. பனி நேரில் இவர்கள் உடலில் விழுந்தால் சிலு சிலுப்பு அதிகமாக இருந்து குளிர் எடுக்கும். காற்றின் உடம்பில் அப்பனித் துளி விழுந்து, அதைத் திவலை திவலைகளாய்க் கொண்டுவந்து, அந்த ஸுக ஶீதத் தன்மையோடு இவர்கள் ஶரீரங்களை அணைகிறது. காற்றும் மந்தமாய் வீசுகிறது. இதனால் இவர்கள் ரதி ச்ரமம் உடனே நீங்குகிறது.

'த்ரிதஶயுவதி நிஶ்வாஸவிஶ்வாஸஹேதி:— த்ரிதஶர் = தேவர்கள். அவர்களுக்கு ஜரை கிடையாது. த்ரிதஶ யுவதிகள் நீங்காத யௌவந முடையவர். முன் சொன்ன வித்யாதர மிதுநம் ஸம்போக ச்ருங்காரத்தில் உள்ளவர். இந்தத் தேவப் பெண்கள் காந்தன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு 'அவன் இன்னும் வரவில்லையே!' என்று பெருமூச்சு விடுகிறார்கள். இவர்களும் அத்ருச்யர். இவர்கள் இந்த வநத்தில் ஒருவருக்கும் தெரியாமல் தங்கள் விரஹாவஸ்தையில் பெரு மூச்சு விடுகிறார்கள். இதைப் பிறர் பார்க்க அவகாஶ மில்லையாகையால், வெட்கத்திற்கு இடமில்லாமல், தங்கள் துக்கப் பெருமூச்சுகளை ஏகாந்தமாக நம்பிக்கையுடன் விடுவதற்கு ஏற்ற இடமாகிறது. இந்த இடம் காம விரஹிகளுக்குத் தைர்யமாய், ஏகாந்தமாய், பிறர் அறிவரே என்ற பயமுமற்று, விச்வஸிப்பதற்குத் தக்கதே யொழிய, யோகாப்யாஸம் செய்பவருக்கு இது விச்வஸிக்கத் தக்க இடமே யல்ல என்று வ்யஞ்ஜநம். போகிகளுக்கு விச்வாஸ ஸ்தாநம் யோகிகளுக்குப் பய ஸ்தாநம்.

முன் பாதியில் வித்யாதராதிகளைப் பேசி விட்டுப் பின் பாதியில் அங்கே வந்திருக்கும் நேபாள யுவதியைப் பற்றி விசித்ரமாக வர்ணிக்கிறார். அப்பொழுது

சந்த்ரிகை பூர்ணமாயிருக்கிறது. ‘[illegible]’ என்பது, பனிக் கிரணங்களை யுடைய சந்த்ரனைச் சொல்லுகிறது. காந்தனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு இந்த யுவதி காத்திருக்கையில், இவள் தோழி, சந்த்ரனையும் பார்த்து இவள் முகத்தையும் பார்த்து, “தோழி! உன் முகம் சந்த்ரனை ஒப்பதே; அதற்கு மேற்பட்ட தென்றும் சொல்லலாம். ஆனால் ஒரு குறை உள்ளது. ‘[illegible]’ என்கிற காளிதாஸ ந்யாயப்படிக்கு, அந்தக் களங்கத்தால் சந்த்ரனுடைய லக்ஷ்மி தூக்கிக் காட்டப்படுகிறது. ஆகையால் அந்த அம்ஶத்திலும் சந்த்ரனைத் தோற்கடிக்க, உன்னுடைய கன்னங்களில் இந்தக் கஸ்தூரி திலகத்தை இடுகிறேன்” என்று சொல்லிக் கொண்டு அப்படியே வைக்கிறாள். அந்தக் கஸ்தூரியின் பரிமளம் அவளுடைய முகத்தின் ஸஹஜமான பத்மவாஸனையோடு அந்த மந்த மாருதத்திற் கலந்து, அந்த வாஸனையும் சேர்ந்து மந்தமாக வீசுகிறது. இப்படி, காற்றுக்கு வேண்டிய ஶைத்யம், ஸௌரப்யம், மாந்த்யம், இந்த மூன்று குணங்களும் உடையது இந்த உபவந மாருதம்; பம்போபவந மாருதம் போல் காமத்தை உத்தீபநம் செய்வது. இது நமக்கு மிக்க அபாயமான இடம். உடனே ஆர்யாவர்த்தத்தை நோக்கி ரதத்தைத் திருப்பி விடு.

“[illegible]।
[illegible] ॥”

என்பது மநுஸ்ம்ருதி. கிழக்கு மேற்கு ஸமுத்ரங்களுக்கும் ஹிம விந்த்ய மலைகளுக்கும் நடுவில் ஆர்யர் வர்த்திக்கும் தேசம். இங்கே,

“[illegible]
[illegible] ஜாதி: ।
[illegible]
[illegible] ॥”

புது யௌவநத்தால் தலைகால் தெரியாமல் நடந்தாலும், தலைமுறை தலைமுறையாகப் பெண்களுடைய பதிவ்ரதா வ்ரதம் நழுவாம லிருந்து வருவதால், நம் தேஶத்தில் ஜாதி நஶித்துப் போகாமல் உறுதியாக இருந்து வருகிறது. [ஸ்த்ரீகளின் பாதிவ்ரத்யத்துக்குப் பேர் போனது நம் தேஶம் என்று ஸ்வாமி திருவுள்ளம்.] ‘[illegible]’— ஸங்கரம் வரலாமென்று கீதை.

தார்க்கன்.— இதோ ஆர்யாவர்த்தம் வந்தோம். இங்கே தீர்த்த யாத்ரா ஜனங்கள் சாரி சாரியாகச் சென்றுகொண்டிருக்கும் காட்சி கண்ணுக்கு இனியதாய் உள்ளது. இதுவரையில் நற்காட்சி யில்லாமல் பட்டினி கிடந்த கண்கள், இப்போது பாரணை பெற்று த்ருப்தி யடைகின்றன. யானைக் கழுத்தில் ஏறினதைப் போல ஸந்தோஷம். இங்கே பஹு வைதேஶிகர்கள் வந்து ஆக்ரமித்ததால், தர்மத்தின் மூன்று கால்கள் ஒடிந்து போயின. நல்ல ஸ்தானமே கிடைப்பதற்கு அரிதாயிருக்கிறது. ஆயினும், பகவானுடைய அவதாரத்தால் ஸகல கலுஷங்களும் நீங்கின இந்த ஸாகேத தேஶத்தைப் பார்க்கவேணும்.

“அயோத்யா திவ்யம் நகரீ ஸரயூஶ்ச விரஜா
விஶேஷதோ யூபாஶ்ச விதிநியமநிர்முக்தபஶவ: |
அகண்டஸ்வாதந்த்ர்ய: ஸ்வபதமயிநோ ஹந்த வஸதே
ஸஹாநைஷீத் தேஷு ஸ்திரசரமஶேஷம் ரகுபதி: ||”

இந்த அயோத்யா நகரீ, ‘அபராஜிதை அயோத்யை’ என்று வேதமோதும் ஸ்ரீ வைகுண்ட திவ்ய நகரியே. இங்கே ஓடும் ஸரயூநதி ‘அம்ருதேநாவ்ருதாம் புரீம்’ என்ற அம்ருதவாஹிநியான விரஜா நதியே. யாகங்களில் பசுக்களைக் கட்டும் இங்குள்ள யூபஸ்தம்பங்கள், பகவான் யாகம்செய்த ஸ்தம்பங்களே. யஜ்ஞ புருஷனே செய்த யஜ்ஞங்களின் ஸ்தம்பங்கள் இவை. இந்த ரகுபதி தம்முடைச் சோதிக்கு எழுந்தருளுகையில், தம்முடைய தடங்கலற்ற (விகுண்டமான) ஸ்வாதந்த்ர்யத்தை அவலம்பித்து, தம்மோடு கூட வஸித்த ஸ்தாவர ஜங்கமங்கள் முழுவதையும் ஒன்று பாக்கியில்லாமல் தம்மோடு கூட நாற்பாலுக்கு உந்நயநம் செய்தார். ராமன் இருக்குமிடம் அயோத்தி என்பர். ராமன் அநேக வர்ஷங்கள் இந்த அயோத்யையில் அவற்றோடு கூட வஸித்தார். ‘ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா,’ ‘ஸாதந்த்ர்யம் வநே வாऽம்ஶி ஸ்வாவஸ்த நிரஸ்த பரூஷ: | ஸாதந்த்ர்யதாஸ்யம் ஸ்வாவஸ்தேநைவ ஸஹ ஜேஷ்யதே’ என்று பின்னால் பரமபதத்தில் வரவேண்டிய ப்ரம்ஹத்தோடுகூட ஸமமான நிரதிஶயாநந்தாநுபவம் ராமனோடு கூட வஸித்த ஸ்திர சரங்களுக்கு இங்கேயே பரிபூர்ணமாகக் கிடைத்து அவற்றால் அநுபவிக்கப்பட்டு வந்தது. அவைகளுக்கு ‘த்வத்ஸங்கி ஸுஹவைஶ்வர்ய ஜங்கமஸ்தாவராணாம் ஸ்வஸ்த்ராஸ்ய தாதீர்க்க ஸ்நேஹவல்லியோஹே’ என்று அதிமாநுஷ ஸ்தவத்தில் அருளியபடி ராம ஸந்நிதி ரஸமே தாரக போஷக போக்யமாயும், அவருடைய விரஹ ப்ரஸங்கமே வாட்டத்தையும் கொதிப்பையும் தருவதாயுமிருந்தன. இப்படி ஸ்நேஹமாயிருந்த ஸ்திர சரங்கள் ராமன் பரம பதத்துக்கு எழுந்தருளுகையில் அவருடைய ஶாச்வத விரஹத்தை எப்படி ஸஹிக்கும்? க்ருதஜ்ஞ ஸார்வ பௌமரான ராமனும் அவர்களது விரஹத்தை க்ஷணமும் ஸஹிப்பரோ? ஒருபோதும் ஸஹியார். தம்மோடு கூட ஆநந்தித்த ஸஹவாஸத்தை அவர்களுக்கும் தமக்கும் நித்யமாகச் செய்வதற்காகத் தம் கூடவே மேலே உந்நயநம் செய்தார். ‘யதேஹைவாநோகேஷு உபநீஷதி’ என்னும் ச்ருதியை யதார்த்தமாகச் செய்தார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

முமுக்ஷுவுக்கு விரோதித்யாகம் எங்ஙனே கூடும்?

[ஸ்ரீ. உப. வில்லிவலம் வாவதூக நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர்,
ஸ்ரீ. அ. மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்]

முமுக்ஷுவுக்கு அவச்ய ஜ்ஞாதவ்யங்களான ஐந்து அர்த்தத்தில் ஜீவேச்வர ஸ்வரூபங்கள் இரண்டும் ஜ்ஞாதவ்ய மாத்ரம். உபாயம் உபதேயம் பலம் உத்தேச்யம் விரோதிவர்க்கம் த்யாஜ்யம் என்ற பிரிவுகள் ப்ரமாணஸித்தம். இவ் விரோதி வர்க்க த்யாகம் முமுக்ஷுவுக்குக் கைகூடுவது எங்ஙனே என்பதை இச் சிறு வ்யாஸத்தில் விவரிக்க விரும்புகிறேன்.

ஈச்வரன் இந்த ஜீவனை விரோதி விஷயங்களினிடையே ஸ்ருஷ்டித்திருக்கும்பொழுது, இவைகளைக் களைவதென்பது இரண்டு விதங்களால் வரலாம். ஒன்று: ஶப்தாதி விஷயங்களைத் தூரவிட்டுத் தான் ஒதுங்கி வர்த்தித்தல். மற்றொன்று: அம்மாதிரி செய்ய இயலாவிடில் அவைகளை நசிப்பித்து வர்த்தித்தல். இவ்விரண்டு விதங்களும் பொருந்தமாட்டா. இப்ராக்ருதங்களை விட்டுத் தூரப் போவதென்றால், அப்ராக்ருத லோகத்துக்குத்தான் போகவேண்டும். அதற்குப் போவதற்குத்தானே இப்பொழுது உபாய சிந்தநம் செய்கிறோம். ஆக: அஜாகளஸ்தநவந்நிஷ்பல ஜீவநம் போல் முடியுமித்தனை. விஷயவர்க்கத்தை அழித்துப்போடுவதென்றால், பகவத் விபூதியை அழித்துத் தாங்களும் அழிந்த அஸுரர்கள்போல் ஆவோம்.

ஆகர்ஷகமான ஶப்தாதி விஷயங்கள் அற்ற அடவியை ஆச்ரயித்தாலோ, அங்கும் ப்ராரப்த கர்மவஶத்தால் விஷய ஸ்பர்ஶம் பிறந்து தபஸ்ஸுக்குத் தடை ஏற்படலாமென்னுமிதை உதாஹரணம் கூறி விளக்குவோம். ஆதிபரதர் என்பவர் க்ருஹ தாராதிகளை த்யஜித்துக் காட்டில் இருந்தபொழுது, ஶரீரம் விடுமளவில் ஒரு மானினிடம் வைத்த மனத்தினராய் மரித்தார். "யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே களேவரம்। தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித:॥" என்றபடி மறுபடி மானாய் மாறினார்.

ஸௌபரி என்பவர் விஷய ப்ரஸங்கத்துக்குத் துளியும் துறையில்லாத தண்ணீரில் தபஸ் செய்தார். அவருடைய கர்மாநுகுண விசித்ர பகவதிச்சையாலே, அவருக்கு அங்கு ஸபரிகரமாய் ஸஞ்சரித்துக்கொண்டிருந்த மத்ஸ்யத்தினிடம் நோக்குண்டாய், 'இதைப்போல் நாமும் எப்போது ஆவோம்?' என்ற த்வரையினால் ஓரரசனிடம் சென்று அவனுடைய அநேக கந்யகைகளை வேண்டிப் பெற்றுத் தாமும் தப:ப்ராபவத்தினால் அநேக ஶரீரங்களை எடுத்துக்கொண்டு இவ்விதம் ஸம்ஸாரி ஸார்வபௌமரானார்.

ஆக: நாம் எங்குச் சென்றாலும் விஷயவர்க்கம் அங்கெல்லாம் அநுவர்த்திக்கும். அதற்காகச் செய்ய அடுப்பது என்னெனில்: ஸ்ரீ கீதாசார்யன் விடை பகர்கிறான்.

“ஸங்கல்ப ப்ரபவாந் காமாம்ஸ் த்யக்த்வா ஸர்வாந் அசேஷத:।
மநஸைவேந்த்ரிய க்ராமம் விநியம்ய ஸமந்தத:॥” இத்யாதி.

இதற்கு ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யம் இருக்கும்படி:—

“ஸ்பர்சஜாஸ் ஸங்கல்பஜாச்சேதி த்விவிதா: காமா:। ஸ்பர்சஜா: சீதோஷ்ணாதய:, ஸங்கல்பஜா: புத்ரக்ஷேத்ராதய:। தத்ர ஸங்கல்பப்ரபவா: ஸ்வரூபேணைவ த்யக்தும் சக்யா:। தாந் ஸர்வாந் மநஸைவ ததந்வயாநுஸந்தாநேந த்யக்த்வா ஸ்பர்சஜேஷ்வவர்ஜநீயேஷு தந்நிமித்தஹர்ஷோத்வேகௌ த்யக்த்வா” இத்யாதி.

[இதன் பொருள்: காமங்கள் இரண்டு வகை. அவை: 1. பாஹ்யேந்த்ரியங்களால் உணர்ந்து கொள்ளக் கூடியவை; 2. மனத்தினால் நம்மதென்று நினைத்துக்கொள்ளக் கூடியவை. இவற்றில் முன்னதைத் தவிர்க்க முடியாது. குளிர் சூடு இவைகள் உறைக்கும்பொழுது உணர்ச்சி தவறாது. ஆனால், அதனால் ஏற்படும் ஸுக துக்கங்களைத் தவிர்க்கலாம். பின்னதை மனத்தினால் ‘நமக்குச் சேர்ந்ததில்லை’ என்று எண்ணினால் அடியோடு விட்டுவிடலாம்] என்பது.

இதுதான் விரோதி த்யாகம் கைகூட வழி. இதையே சற்று ஸம்வாதங் கொண்டு ஆராய்வோம். ஸ்ரீ நம்மாழ்வார் இவ்வர்த்தத்தை “நீர் நுமதென்றிவை வேர் முதல் மாய்த்து” என்று பிறருக்கும், “யானே யென்னை அறியகிலாதே, யானே யென்தனதே யென்றிருந்தேன்” என்று தனக்குமாக அருளிச்செய்யும்போது வெளியிட்டார். ஆக: இந்த விதம் விரோதிகளை விட்டவன் நகரத்திலே வர்த்திக்கவுமாம்; காட்டிலே வர்த்திக்கவுமாம். இங்கோடு அங்கு ஒருவித வாசியில்லை. இவ்வர்த்தத்தை மேற்கூறுகிற ப்ரமாணம் வெளியிடுவதைப் பார்க்கலாம்.

“வநேபி தோஷா: ப்ரபவந்தி ராகிணாம்
க்ருஹேஷு பஞ்சேந்த்ரிய நிக்ரஹஸ் தப:।
அகுத்ஸிதே கர்மணி ய: ப்ரவர்த்ததே
நிவ்ருத்தராகஸ்ய க்ருஹம் தபோவநம்॥”

ஜநக மஹாராஜரும் ஸ்ரீ குலசேகரப் பெருமாளும் பெரிய ராஜ்ய லக்ஷ்மியுடன் இருந்தபொழுதேயன்றோ ருஷிபிஸ்துல்யர்களாய் ப்ரஸித்தர்களாயிருந்தது. அவர்கள் வைராக்யம் “மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் ந மே கிஞ்சித் ப்ரதஹ்யதே” “ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான்வேண்டேன்” என்னும் அவர்கள் பாசுரங்களாலே ஸுவ்யக்தம்.

இவ்வர்த்தத்தை வேதாந்த ஸூத்ரத்தில் பாதராயணர் அறுதியிட்டார். ச்வேதாச்வதரம் என்னும் ச்ருதியில் அநேக விசேஷண விசிஷ்டமான தேச விசேஷம் நியமிக்கப்பட்டது தபஸ்ஸித்திக்காக. ‘யத்ரைகாக்ரதா தத்ராவிசேஷாத்’ என்று ஸூத்ரமிட்டார் பாதராயணர். இதனால், மனதிற்கு ஐகாக்ர்ய ஹேது வென்று தானே ச்ருதி சொன்ன இடங்களுக்கும் இதற்கும் விசேஷமில்லை என்றாயிற்று.

மாநஸிகமான அபிமாநம் விஷயங்களில் நடையாடிற்றாகில் அஸந் நிக்ருஷ்டமாக்கி இந்த்ரியங்களைப் படுவழிப்படுத்தும். ஆகையால் சரீரத்தால் விஷயங்களைத் தூரஸ்தமாக்குவது அப்ரயோஜகம். மனத்தினால் ஸம்பந்த மறுத்து விடுவதுதான் சரியான வழியென்று, இவ்வளவால் தேறின இவ்வர்த்தத்தை "இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்தா அர்தேப்யஶ்ச பரம் மந:" என்று கடவல்லி சொல்லிற்று. உபாஸகன் கட்டுப்படுத்த வேண்டியவைகளில் இந்த்ரியம் விஷயங்கள் இவைகளைவிட மநஸ்ஸே ப்ரதாநம் என்பது ஷ்டி ச்ருதியின் பொருள். 'மநஸ்ஸினால் ஸம்பந்த மறுப்ப தென்பது ஆவச்யகமென்றவளவில், சிர பரிசிதமான இந்த ப்ராக்ருதத்தில் எப்படி அநந்வயாநுஸந்தாநம் பண்ண ஶக்யமாகும்?' என்ற ஶங்கை எழுகிறது. இதற்குக் கீழ்க்கண்ட பாசுரம் விடையளிக்கும்.

"மின்னின் நிலையில மன்னுயி ராக்கைகள்
என்னு மிடத்திறை யுன்னுமி னீரே."

இங்கு ஆழ்வார், 'மின்னல்போல் அதி சஞ்சலம் இந்த ஶரீரம் என்று தோஷ தர்ஶநம் பண்ணினீராகில் இதை விட்டு விடலாம். இது அஶக்யமன்று' என்று உலகுக்கு உபதேஶிக்கிறார். '[illegible]' என்றது ப்ரமாணமும். இங்கு ஈட்டில் ஓர் உதாஹரணம் அருளிச் செய்யப் பட்டிருக்கிறது.

"சந்தந ப்ராந்தியாலே நாற்றம் குளிர்த்தி மென்மைகளைக் கொண்டு ஸர்ப்பத்தின்மேலே கையை வைத்துக்கொண்டு கிடந்துறங்கா நின்றால், ஒரு தார்மிகன் 'இது ஸர்ப்பங்கிடாய்!' என்று அறிவித்தால், பின்னை அதினின்றுங் கைவாங்கி யல்லது நிற்கவொண்ணாதிறே." இத்யாதி. ஆகையால் 'இப்ராக்ருதங்கள் அல்பங்கள், அஸ்திரங்கள், துக்கம் கலந்தவைகள், துக்க ஹேதுக்கள், துக்கத்தினால் ஸம்பாதிக்கப்பட்டவைகள், பகவதநுபவ விரோதிகள்' என்றிப்படி அநுஸந்திக்கப்பட்டவைகளாய் நம்மை விட்டகலும். இதுதான் ப்ரமாண ஸம்ப்ரதாயங்களால் தேறின விரோதி த்யாக மார்க்கம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திவ்ய ஹவிஸ்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A.L.T., வித்வான், திருவையாறு.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

மன்னார்குடியில் மாதவனுக்குத் திவ்யோத்ஸவம் வந்தது. பரம ஏழைகளாகிற நாங்கள் இக்காலத்தில் பத்து நாளும் அங்கேயே இருந்து விடுவது வழக்கம். ஸேவார்த்திகளுக்கு நடக்கும் ததியாராதந கைங்கர்யம் என்னைப் போன்ற ஏழையர்களுக்கு மிகவும் உபகார மல்லவா? பெண் பிள்ளைகளின் கூட்டத்தில் சாப்பாட்டிற்காக எவ்வளவு கஷ்டம்! எவ்வளவு இரைச்சல்! எவ்வளவு சண்டை! நான் தனியாக இந்தப் போராட்டங்களிற் கலவாமல் நின்று விடுவேன். வயிற்றுக்காக ஒருவர்க்கொருவர் நல்ல இடம் கிடைக்க வேண்டு மென்றும், தக்க ஸந்தர்ப்பத்தில் தக்க இடத்தில் உட்காரவேண்டு மென்றும் போட்டி. அடிதடிகூட நடக்கும். கர்ப்பிணிகள் பெருமூச்சு விடுவார்கள். குழந்தைகள் கூச்சலிடும்.

ததியாராதந மண்டபத்தில் ஓர் இரவில் பெண்டுகள் கும்பலாக உள்ளே நுழைந்தனர். நானும் ஓடினேன். ஐயோ! கண்களாரக் கண்ணபிரானை ஸேவிக்கப் போட்டி போடலாம். இப்படி தூராக்குழியைத் தூர்ப்பதற்குப் படும் பாட்டைப் பார்க்க என் மனம் அருவருப்புற்றது. ஆனால் ஏழைகளுக்குக் கண்ய மேது? ஏழைகளுக்குப் பரந்த உள்ள மேது? ஹ்ருதயத்தில் மிகுந்து நின்ற கொஞ்சம் நல்ல உணர்ச்சிகளும் பசியாகிய கொடுந் தீயால் எரிக்கப்படு மன்றோ? நாணம் இறந்துபடும்; பெண்மை பறக்கும். நான் தற்செயலாய் நல்ல இடத்தில் உட்கார்ந்திருந்தேன். ஒரு கர்ப்பிணி, கையில் ஸுமார் நான்கு வயதுள்ள மெலிந்த ஒரு பெண் குழந்தையைப் பிடித்துக்கொண்டு, இடுப்பில் ஒரு சிறு குழந்தையை வைத்துக் கொண்டு நுழைந்தாள். இடமே இல்லை. மற்றப் பெண்டுக ளெல்லாம், அவளைக் கோபத்துடன் சிலரும் பரிஹாஸமாகச் சிலரும் பார்த்தனர். இரண்டொரு இடங்களில் அந்தப் பெண் உட்கார முயன்றாள். ஏதும் பயனில்லை. அப்பெண் மலங்க மலங்க விழித்தாள். நான் திடீரென எழுந்தேன். உடனே அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு 'அம்மா! இப்படி உட்காருங்கள்' என்றேன். அந்தப் பெண் வேகமாக—என்னைப் பார்த்து ஏதும் சொல்லாமலே—அந்த இடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள். பேரிரைச்சலுக்கிடையில் என் தாயின் கர்ஜனை காதில் விழுந்தது. "ஏ அல்பாயுஸ்ஸே! வயத்துக்குப் பிண்டம் கொட்டிக் கொள்ளக்கூட ஸாமர்த்யத்தைக் காணோமே? மஹாராணி மாதிரி இடத்தை விட்டுவிட்டு ஓடறதே!" என்றாள். மற்றொருத்தி, "அவ ஆமண்டியான் ததியாராதனம் பண்றான் போலிருக்கு. இவ எங்கே இருந்தாலும் சோறு இவளைத் தேடிண்டு வரும் போலே யிருக்கு" என்றாள். திடீரென அவள் தாயார் எழுந்து "ஏ பிசாசே! இடத்தைப் பொத்திக்கோடி; நீ கழிச்சல்லே

போக" என்று என்னை மறித்தாள். 'எனக்கு உடம்பு ஸரியாயில்லை அம்மா' என்று சொல்லி நான் நகர்ந்தேன். பளீர் பளீரென்று என் கன்னத்தில் அறைகள் விழுந்தன. "ஒக்காருடீ கழுதை! அந்த வெட்கங் கெட்ட முண்டை மஹாராணி மாதிரி ஒக்காந்துட்டா, அவளைக் கைபிடிச்சு இழுத்தெறிஞ்சுட்டு உட்காரு; போ" என்றாள். நான் சற்று யோசித்தேன். 'போபோ' என்று என்னைத் தள்ளினாள். போக மறுத்த நான், அவளுடைய பலத்த தாக்குதலை எதிர்க்க முடியாமல் பின்புறம் சாய்ந்தேன். ஜனங்களெல்லாம் கட கடவென்று சிரித்தார்கள். என்னைப் பின்புறம் யாரோ பிடித்ததுபோல் தோன்றிற்று. ஜ்வலிக்கும் காஸ்லைட் வெளிச்சத்தில் பார்த்தேன். சுமார் ஐம்பது வயதுள்ள ஒரு பெரியவர் என்னைப் பிடித்துக்கொண்டார் என்று அறிந்தேன். ஒரு க்ஷணத்தில் அவரைத் தலையிலிருந்து கால்வரையில் நோக்கினேன். உயர்ந்த ஆக்ருதி; பால்போன்ற தேக நிறம்; நரைகலந்து, முதிர்ந்த வயதிலும் அதிகமாகக் காணப்பட்ட கூந்தல்முடி; த்வாதச ஊர்த்வபுண்ட்ரம்; பால் போன்ற மெல்லிய பத்தாறு வஸ்த்ரம்; தயையே உருவெடுத்த தோற்றம். ஒரு கையில் இலைக்கட்டு வைத்திருந்த அவர், மற்றொரு கையால் என்னை விடாமல் பிடித்துக்கொண்டார். நான் நடுங்கினேன். பெண்களுக்குரிய நாணம் என்னை வாட்டியது. இனிய குரலில், "ஏனம்மா குழந்தையை இப்படி அடிக்கிறீர்கள்? தன் இடத்தைப் பிறர்க்கு விட்டுக்கொடுத்தது எவ்வளவு உத்தமம்!" என்றார். என்ன கம்பீரமான குரல்! என்ன அன்பு! எல்லா வேடிக்கைகளையும் அவர் பார்த்துக் கொண்டிருந்தார் போலும்! அவரைக் கண்டவுடன் என் தாய் ஓடித் தன் இடத்தில் மறைந்தாள். பெண்டுகளெல்லாம் சத்தம் போடாமல் 'கப்சிப்' என்று ஒடுங்கினர். ஸ்ரீ கண்ணபிரானது திவ்யோத்ஸவத்தில் அந்ந தானம் செய்யும் உத்தமன் என்று அவரை ஊஹித்தேன். என்னையும் அவரையும் சேர்த்து நிறுத்திய விதியின் உத்தேசந்தான் என்னவோ! சோதி வடிவத்தில் இருள் பிண்டம் போல் நின்றேன். தெய்வ புருஷனின் கையில் பிசாசுபோல் தோன்றினேன். உடம்பெல்லாம் நடுங்க ஒன்றும் செய்யத் தோன்றாது நான் விழிக்கும்பொழுது, அவர் என்னைப் பிடித்த பிடி விடாமல் மெதுவாக அழைத்துச் சென்று, பின்புறக் கதவைத் திறந்து முன்னடியில் உள்ள பெரிய படிக்கட்டில் உட்காரவைத்தார். காஸ்லைட் ஒன்று எரிந்துகொண்டிருந்தது. மூன்று நான்கு பெண்கள் பக்கலில் உட்கார்ந்திருந்தனர். "அம்மா! இவர்கள் என் பந்துக்கள்; இங்கேயும் ப்ரஸாதம் கொண்டு வருவார்கள். ஸங்கோசமில்லாமல் சாப்பிடு" என்று சொல்லி, "கமலா! தன் இடத்தை அந்தக் கர்ப்பிணிக்கு விட்டுக் கொடுத்தாள் என்று சற்று முன்பு உன்னிடம் சொன்ன பெண் இவள்தான். இந்த மஹோத்ஸவத்தில் இப்படிப் பெரிய மனதும் ஸ்வரூபமும் பெற்ற குழந்தை கிடைத்ததுதான் நம் கைங்கர்ய பலன்" என்றார். அவர் முகத்தைப் பார்த்தேன். மாசு மறுவற்றுத் துலங்கி தெய்வத் தன்மை ததும்பும் அவர் திருமுகத்தில் என்ன அன்பு ஜ்வலித்தது! அந்த அன்பினால் வயதின் முதுமையுடன் கலந்த என்ன அழகு ஜ்வலித்தது!

இந்தப் பரந்த உலகில் என்னை நோக்கி அன்பார்ந்த சொல் சொல்வாரை இன்றுதான் முதன் முதல் என் வாழ்வில் கண்டேன். திகைத்தேன். என்னைத் தொடக்கூடிய கரங்களா அவை? என்னை நோக்கத்தக்க முகமா அது? அவர்

கைகளில் என் உடலின் அழுக்கும் உள்ளத்தின் பாபமும் கூடப் படிந்திருக்குமோ என்று பயந்தேன். என் பக்கத்தில் உள்ள ஸ்த்ரீகள் பட்டாடையுடுத்தி நக்ஷத்ரம்போல் ஜ்வலிக்கும் வைர நகைகளும் அணிந்திருந்தனர். அப்ஸரஸ்ஸுக்களுக் கிடையில் பிசாசுபோல் நான் ஏன் இவர்களுடன் இருக்க நேர்ந்தது? கண்ணா! நீ என்னைக் கைவிடவில்லை. நீ கண்ணுக்கிலக்காகாத ஒரு சாயா வஸ்துவல்ல. ஊனிலும் உடலிலும் உறைந்து வாழும் உயிர்த் தெய்வம் என்று காட்டி எனக்குப் புத்தி அளிக்கவோ இங்ஙனம் அன்பு காட்டினாய்? நான் உன் அன்புக்குப் பாத்ரமா? என்னை அங்கீகரிப்பது உன் உயர்வுக்குப் பொருந்துமா?" என்று உள்ளங் கரைந்து மெல்லிய குரலில் கதறினாள்.

'அம்மா இந்தப் பொங்கலை வாங்கிக்கொள்' என்றார் அந்தத் தயாளு. என் சிந்தனைக் கடலிலிருந்து எழுந்து மேல் நோக்கினேன். என் கண்களில் கரகரவென்று சொரியும் கண்ணீர்த் தாரையைத் துடைத்துக்கொள்ளாமல் கையுங் களவுமாய் அகப்பட்ட திருடன்போல் விழித்தேன். பால் போல் வீசும் காஸ் லைட்டின் வெளிச்சத்தில் அவர் முகத்தை நோக்கினேன். அவர் முகத்தினுள்ள அன்பை என் விழிகளால் நோக்கித் தாங்க முடியாது போனேன். ஸூர்யனை எந்த மனுஷன் உற்று நோக்க முடியும்? அவர் கண்களில் நீர் ததும்பியது.

'பாவம்! நன்னா அடிச்சுட்டா போலிருக்கு' என்றாள் ஒரு பெண். 'அவள் என்ன பிசாசுபோலேன்னா இந்தக் குழந்தையைப் பிடிச்சா' என்றாள் மற்றொருத்தி. 'அழாதே அம்மா! சாப்பிடு. எங்களோடே இருக்கச்சே அவாளை மறந்துடு. அவள் அடிச்சது அந்யாயம்' என்றாள் இன்னொருத்தி. அவள் தன் உடலை அசக்கிப் பேசும்பொழுது அவளுடைய விலை உயர்ந்த பட்டாடை சலசல வென்று சப்தித்தது. காதில் தோடும், கழுத்தில் வைரமாலையும், கையில் வளைகளும், பளீர் பளீரென்று ஜ்வலித்தன. அழுக்கடைந்து இன்ன வர்ண மென்று நிர்த்தேசிக்க முடியாத என்னுடைய கந்தல்மயமான ஆடையை உற்று நோக்கினேன். வெட்கத்தால் முகம் சிவந்தேன். சிவப்பதா! அட்டைக்கரி போன்ற என் முகவர்ணத்தில் வெட்கச் சிவப்புகூடத் தெரியுமா? என் எதிரில் நின்ற தெய்வ புருஷனது திருமேனியில் பிறர் மூச்சுப் பட்டால் சிவக்கும். இருளின் முன் சோதி போலும், பாவத்தின் முன் தர்ம தேவதை போலும், தேவபுருஷன் முன் பிசாசு போலும், அவர் என் முன் ஆஜாநுபாஹுவாக நின்றார். அன்புடன் அவர் தந்த ப்ரஸாதத்தை வாங்கிக் கொண்டேன். சாப்பிடுவதுபோல் பாவனையும் செய்தேன். அவரது அன்பின் நினைவுகளுக்கு முன் இந்தப் பொங்கல் எத்துணை இனிமை உடையது? கை அந்தப் பொங்கலில் உழன்றது. மனம் குழம்பியது. கண்களில் நீர் தளும்பியது.

சாப்பாட்டில் அவர் செய்த உபசாரமும், பருகுவதற்கு எனக்குக் கொடுத்த வெந்நீரும் என் மனத்தின் சோர்வை அகற்றின. "வஞ்சுளம்! கண்ணன், கோவிலில் அர்ச்சா வடிவமாய் இருக்கிறான். இந்த துக்கிகளான

பெண்களும், ஏழைகளும், ஆச்ரயமற்ற அநாதைகளும் அவனுடைய விபவ வடிவங்கள். ஐயோ! என்ன துக்கமயமான உலகம்! வாஸுதேவா!" என்றார் அவர். கண்ணனை நானும் நேரில் பார்த்ததாக நினைத்துக்கொண்டேன். ஆனால் ஸர்வஸ்வத்தையும் ஸ்ரீ வாஸுதேவனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டியது கடமை. இன்பம் ஒரு புருஷார்த்தம் என்கிறார்களே. அப்படி எனக்கு ஒன்றும் இல்லாது போயிற்றே. நிலமில்லை புலமில்லை; ஐயோ உடலிலாவது அழகுண்டா? 'ஏ வாஸுதேவா! என் வடிவழகே உனக்கே அர்ப்பணம்' என்று கதறுவேனே! இந்த ஜுகுப்ஸிதமான வடிவத்தை, அந்த திருவுக்கும் திருவாகிய செல்வனுக்கு எப்படித் திவ்யோபஹாரமாய்க் கொடுப்பது? ஆனால் எப்படிப்பட்ட வடிவழகும் அழகுக்கழகாகிய அவனுக்கு ஒரு பொருட்டா? அல்லது இந்த அழகுதான் சிறந்த தெய்வ அழகா? அது தான் நிலைத்த அழகா? 'ஜஹௌ ந்ருவு திவம்ஸா நாம்வவ ஸுரஸுரஸாஶவி' என்றபடி அப்ஸரஸுகளின் உடலும், மாம்ஸம் என்பு ரத்தம் சீழ் என்ற நாற்றமான த்ரவ்யங்களால் ஆகியது தானே. என் கண்ணனது செந்தாமரைக் கண்கள் உடலையா நோக்கும்? கறுத்து விகாரமான உடலுக்குள்ளும் விளங்கும் நித்யமாய் நிர்மலமாய் ஜ்வலிக்கும் ஆத்மாவையன்றோ நாடும்? அதையன்றோ தனக்குத் திவ்யோபஹாரமாய் விரும்பும்? ஜீவன் தன்னை லோகநாதனுக்கு ஒப்புக்கொடுக்கும் மஹாயஜ்ஞத்தில் அதுவன்றோ திவ்ய ஹவிஸ்?

நடுநிசி. மணி ஒன்றிருக்கலாம். தெருவெல்லாம் உத்ஸாஹம். வீடெல்லாம் உத்ஸாஹம். கடையெல்லாம் உத்ஸாஹம். எங்குப் பார்த்தாலும் வெளிச்சமும் வேடிக்கையும். இருட்டு என்பதே தெரியவில்லை. கோபால ஸமுத்ரம் திருவீதியிலிருந்து புறப்பட்டு ருக்மிணீ தீர்த்தத்தின் கீழ்க்கரையில் வந்துகொண்டிருந்தேன். பக்கத்தில் யாரோ புருஷர்கள் வருவதறிந்து சற்று ஒதுங்கினேன். 'கல்யாணீ' என்ற குரல் கேட்டது. திடுக்கிட்டேன். 'என் வாழ்வில் என்னை இத்துணை அன்புடன் கூப்பிடும் குரல் யாருடையது? என் இருளில் வீசிய ஒளி யாருடையது?' என்று எண்ணிக்கொண்டே திரும்பினேன். அந்தத் தெய்வ புருஷன் தான். கீழே விழுந்து நமஸ்கரித்தேன். 'என் பெயரை இப்பெம்மான் எங்ஙனம் அறிந்தார்? விளக்குமாறு பட்டுக் குஞ்சம் பெற்றது போல், நான் 'கல்யாணி' என்ற பெயர் பெற்றேன்! இதைக் கண்டு அவர் தம் உள்ளத்திற்குள்ளே நகையாரோ!' என்று எண்ணினேன்.

"அம்மா! எழுந்திரு. உன் பரிதாபமான கதையைக் கேள்வியுற்றேன் வருந்தாதே அம்மா! ஏழ்மை யென்பது ஈச்வரன் கொடுத்த நிகரற்ற செல்வமன்றோ? குழந்தாய்! நீ எத்துணைக் கஷ்டமடைகிறாய்? கவலைப்படாதே. ஆயிரக்கணக்காய் இப்படி ஜனங்கள் வருந்த, ஹ்ருதயமற்ற மனிதன் இதைப் பரிஹரிக்க வழி தேடுவது தெய்வப்பணி என்று உணராது, பிறர் துயரைக் கண்டு பிசாசுபோல் களிக்கிறானே! கண்ணா! வாஸுதேவா! இந்த இருள் தருமா ஞாலத்தில் நீ வந்திராவிட்டால்—அன்பின் மூர்த்திகளான ஆழ்வார்கள் அவதரித்திராவிட்டால்—கருணைக் கடலான ஸ்ரீ ராமாநுஜன் நடமாடாதிருந்தால்—இது உலகமா? நரகமன்றோ? உன்னால், ஆழ்வார்களால், வள்ளல் இராமானுசனால், இது வைகுந்தமாயிற்று" என்று அவர் சொல்வது எனக்கு மனத்தில் பதிந்தது. அவருடைய பக்தியும் பூததயையும் என் மனத்தைக் கொள்ளை கொண்டன. என் கண்களில் நீர் போராடியது.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீசடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

கலி காலத் தியல்பு

திருப்புகழ்

திருக்கடிகாசலம் [சோழசிங்கபுரம்]

சந்தக் குழிப்பு

தனதன தந்தன தனதன தந்தன
தத்தா னத்தன தத்தா னத்தன
தனதன தந்தன தனதன தந்தன
தத்தா னத்தன தத்தா னத்தன
தனதன தந்தன தனதன தந்தன
தத்தா னத்தன தத்தா னத்தன—தனதான.

மறைமொழி யந்தணர் தவறியி ழிந்தகு
லத்தீ மைத்தொழில் கற்பார் பற்பல
உயர்குல வங்கிச ரிழிகுல ரென்றவ
ரிற்கீழ் பட்டுந டப்பார் முற்றவு
மனுமுறை மங்கிந லரசர்பெ ரும்பொரு
ளுக்கா சைப்பட நிற்பார் தற்புரு—டனைவிணில்
மனைவியு நிந்தனை புரிகுவள் மைந்தர்கள்
பெற்றோ ரைச்சின வித்து டிப்பர்கள்
தரும மிழிந்திடு மதர்மமு யர்ந்திடும்
மெய்க்கா மப்பசி மிக்காய் நிற்கும்விண்
மழைபெய லுங்கெடும் விளைவுகு றைந்திடும்
முற்பா சத்தினை யற்றோர் நச்சுவர்—மனையாளை

இறைகுரு மந்திர வுணர்வு மறைந்துந
கைப்பார் சத்வகு ணத்தோர் மட்கிய
தமகுண முந்துவர் சவையில்வெ றும்பொய்கள்
மெய்ப்பா மிக்கப ணத்தா னற்குல
மெளியவர் நைந்திட வலியவர் தஞ்சொல்வ
ழக்கா முற்றப சுப்பா லற்றிடு—லதுபேணர்

எதிர்சம யங்களு னுடையதின் விஞ்சவெ
டுப்பா மொய்த்தக லிக்கா லத்தியல்
பிவையெனில் வஞ்சக னுனதுபெ ரும்புக
ழைப்பா விப்பது னைச்சே விப்பதெவ்
வியல்பிது வுன்செய லலதினி யென்கொல்க
டத்தே றக்க்ருபை வைத்தே ரட்சணை—புரிவாயே

கறுவொடு கஞ்சன்முன் விடவட ருஞ்சக
டக்கால் பட்டுவி ழக்கா விட்டவ
மருதிடை சென்றுயர் கவடுகள் ரண்டுபி
ளப்பாய் விட்டுவி ழப்பே தித்தவ
களவொடு நின்றதொர் விளவிடை கன்றையு
ருத்தே முற்கைம டுத்தே றிட்டவ—விழியூடே

கனல்பொறி சிந்திட வெதிர்பொர வந்தக
ரிக்கோ டற்றுவி ழக்கோ பித்தவ
மடியி லிருந்திள முலையுயி ருண்டல
கைத்தாய் நட்டம்வி ளைத்தே விட்டவ
கனகனு டம்பிரு பிளவெழ நெஞ்சுகி
ழித்தே நெற்றிந டுக்கூ றிட்டருள்—நெடுமாலே

அறைகுடி லின்புற முறையிடு கின்றத
யிர்ப்பா னைக்குட நெய்த்தா ழிக்கட
முளவழி கண்டவை களவினி லுண்டுக
ளித்தே சுற்றியொ ளித்தோ டத்தெரு
வதிலிடை மங்கையர் வருவது கண்டுபி
டித்தே மத்தின டித்தே கட்டிட—அழுவோனே

அறுதுணி கங்கணர் நிலவிய வெண்பலர்
நெட்டோ லைச்சய னத்தார் கைத்தடி
வெறியவெ ருண்டொரு கருமுக மந்திய
ணிப்பூ கத்தின்மி தித்தே றக்குலை
யதுசித றுங்கடி கையினிலி ருந்தரு
ளக்கா ரக்கனி யத்தா முத்தர்கள்—பெருமானே.

[பெருமாள்:—யோகா ந்ருஸிம்ஹன்; (தக்கான்; அக்காரக்கனி.) தாயார்:- அம்ருத வல்லி நாச்சியார்; சிறிய திருவடிக்கு ப்ரத்யக்ஷம்; பேயாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.]

[தெளி பொருள்] கஞ்சன் கறுக் கொண்டு ஏவியனுப்பின வலிமை பொருந்திய சகடாஸுரன் மாய்ந்து சிதையும்படி அவனைத் திருவடிகளால் உதைத் தருளினவனே! இரண்டு மருத மரங்களினிடை (கட்டிய உரலோடு இழுத்துச் சென்று) அம்மரங்கள் கிளைகளோடு இரு பிளவாய் முறிந்து விழும்படி பேதித்தவனே! கள்ளத்தனமாய்க் கன்று வடிவம் கொண்டு வந்த அஸுரனைக் கொண்டு விளாமரத்தை முறித்து அழித்தவனே!

விழிகளில் கனற் பொறி சிந்தும்படி தன்னுடு போர் புரிய வந்த குவலயா பீடம் என்னும் யானையின் கொம்புகள் இற்று முறியும்படி விழக் கோபித்தவனே! பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி பூதனையின் மடியிலிருந்து அவளது இளமுலையூடு உயிரை வற்ற வாங்கி உண்டவனே! இரணியாசுரனுடைய உடல் இரு கூறும்படி அவனது நெஞ்சைக் கூருகிராற் குடைந்து கொன்றருளிய நெடுமாலே!

குடிசையின் புறத்தே சென்று முறையிட்டு விற்பதற்கென வைத்துள்ள தயிர்ப் பானையும் நெய்த் தாழியும் இருப்பன கண்டு, அத் தயிரையும் நெய்யையும் களவினில் உண்டு களித்து ஒருவரும் அறியாவண்ணம் ஒளிந்து ஓடுகையில், தெருவிற் செல்லும் ஆய மங்கையர் கண்டுபிடித்து மத்தினால் அடித்து தூணிற் கட்டிட, அது தாளாது அழுவோனே!

கிழிந்த உடையும் வெண்பல்லும், நீண்ட (பனை) ஓலைப் பாயிற் படுத்துறங்கும் ஆயர் தமது கைத்தடி கொண்டு கருங் குரங்கின் மேல் எறிய, அதனால் வெருண்டு அது பாக்கு மரத்தின் குலைகளின் மீதே மிதித்தேற, அதனால் அக்குலைகள் சிதறுண்டு ஓடப் பெறும் திருக்கடிகையில் எழுந்தருளியுள்ள அக்காரக்கனி என்னும் திருநாமத்தை யுடைய என் அப்பனே! முக்தர்கள் தலைவனே!

[அடியேன் விண்ணப்பம் பண்ணிக்கொள்வதைச் சிறிது செவிசாய்த் தருளவேணும்]

வேத மோதும் அந்தணர் தமது குல தர்மம் தவறி, இழிகுலத்தோர் செய்யும் தீத் தொழிலைச் செய்வர்; உயர் குலத்தில் பிறந்தோர் இழிகுலத்தவரினும் கீழ்ப்பட்டு நடப்பர்; நல்லரசாட்சியுடைய அரசர், மனு நீதி தவறிப் பொருளைக் கொள்ள ஆசைப்படுவர்;

மனைவி தன் புருஷனை வீணில் பழிப்பள்; பிள்ளைகள் பெற்றோரைச் சினந்து தூஷிப்பர்; தர்மம் குறையும்; அதர்மம் உயரும்; உடலாசை தலையெடுத்து நிற்கும்; காலமழை பெய்யாது; அதனால் விளைவு குறைவடையும்; ஸம்ஸாரப் பற்றற்ற பெரியோர் களும் பெண்ணாசை கொள்வர்;

கடவுள் குரு மந்த்ரம் இவைகளின் உணர்ச்சியே இல்லாமல் மக்கள் நாச மடைவர்; ஸத்வ குணமுடையோர் தமோ குணத்தை மேற் கொள்வர்; ந்யாய ஸபைகளில் பொய் மெய்யாகும்; நற்குலத்தோரான எளியோர் நைவர்; வலியோரான செல்வர் சொல்லே செல்லும். பசு பால் கொடாவிடில் அதனைப் போஷியார்.

மெய்ச் சமயங்கள் தாழ்ந்து புறச் சமயங்கள் ஓங்கும். கலிகாலத் தியல்பு இத் தகைய வலியுள்ளதாகில், வஞ்சகனாகிய அடியேன் உன் புகழினை மனமார நினைப்பதும் நாவாரத் துதிப்பதும் மெய்யார வணங்குவதும் எங்ஙனம் இயலும்? எல்லாம் உன் செயலன்றி வேறு என் உளது? ஆதலின், அடியேன் கடைத்தேறும்படி காக்க வேண்டியது நின் கடமை:]

* * *

நூற்றெட்டுத் திருப்பதிகளுள், 'ஆறே டிரெட்டுத் தொண்டை' என்று தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டினுள், ஈற்றுத் திவ்ய தேசமான சோழசிங்கபுரம் என்று வழங்கப் பெறும் கடிகாசலத்தைப் பற்றிப் பாடிய தொரு திருப்புகழ் இது. திருப்புகழ் என்னும் சொற்றொடர், 'அழகிய தோத்திரப் பாடல்களை யுடைய நூல்' என்று பொருள் படும். நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ் என்னும் பெயரினையுடைய இந்நூல், பொருட் செறிவும் குழிப் பழகும் வாய்ந்து, பயில்வோர்க்கு இன்சுவை பயக்கும் ஓசையையுடையது. அருணகிரி நாதர் இயற்றிய சைவத் திருப்புகழினும் வேறுபட்டது; காலத்திற் பிந்தியது; விஸிஷ்டாத்வைத ஸித்தாந்த புஞ்ஜமானது; பல்வகைச் சந்தங்களோடு விளங்குதலால், பல் வகை இசைகளில் பாடுதற் குரியது. 108-திருப் பதிக்கும் 108-அழகு நிரம்பிய திருப்புகழ்ப் பாடல்களும், முதலில் நம்மாழ்வார் துதிப் புகழ், இறுதியில் நந்திக்ராமத்தைப் பற்றிய திருப்புகழ், இவை உட்பட 110-திருப்புகழப் பாடல்களும், ஒவ்வொரு செய்யுளின் ஈற்றில் பெருமாள் திருநாமம், பிராட்டி திருநாமம், ஆழ்வார் மங்களாஸாஸநம், ஆகிய இவைகளும் இந்நூலில் அடங்கியுள்ளன.

இதனை இயற்றியவர் குரவை இராமாநுஜ தாஸர். இந் நூலாசிரியரது பிறப்பிடம் காலம் முதலியன நன்கு புலப்படவில்லை. புலவர்கள் இந்நூலை ஆழ்ந்து நோக்க, இதன் சுவைஅவர்கட்குத் தெள்ளிதிற் புலனாகும். இந்நூலின் சுவை ஸ்ரீ வைஷ்ணவத் தமிழறிஞர்க்கும் பிறர்க்கும் புலனாகுமாறும், இப்படி இணையற்ற பக்திச் சுவை நிரம்பிய நூலொன்று தமிழகத்தின்கண் உள்ளதென்று அறியாதார் அறியும் பொருட்டும், ஸ்தாலீபுலாக ந்யாயமாக ஒரு திவ்ய தேசத்தின் பாசுரம் மாத்ரம் அடியேனது சிற்றறிவிற்கு ஏற்ப (தெளிவுரையுடன்) எழுதப்பட்டுள்ளது. பல்லாண்டுகட்கு முன் எழுதிய இந் நூலின் கண் கலியுகத் தியல்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளதென்பதை அறிஞர்கள் ஆராய்ந்தறிக.

ஒரகடம். கோ. ஸுதர்சந தாஸன்,
[தமிழ்ப் பண்டிதன்]

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா '46 அக்டோபர்மீ-த்துச் சந்தா வரவு

				ரூ.	அ.
132	ஸ்ரீ.	D. ராமஸ்வாமி அய்யங்கார், திருநெல்வேலி.	....	5	0
136	,,	D. சேஷய்யங்கார், பண்டப்பாடு.	....	3	0
183	,,	K. R. ஸுந்தரராஜய்யங்கார், ஸமயநல்லூர்.	....	3	0
228	,,	T. K. ஸ்ரீநிவாஸையங்கார், தில்லையம்பூர்.	....	3	0
239	,,	T. R. வெங்கடாசாரியார், புதுக்கோட்டை.	....	3	0
263	,,	K. ஸ்ரீநிவாஸய்யங்கார், திருமணம்.	....	3	0
274	,,	M. சடகோபாசாரியர், ஒரகடம்.	....	3	0
409	,,	S. ஸ்ரீநிவாஸராகவையங்கார், ஒப்பிலியப்பன் கோவில்	.....	3	0
512	,,	M. S. ஸுந்தரராஜய்யங்கார், ராமநாதபுரம்.	....	2	0
517	,,	C. R. ஸுந்தராசாரியர், பம்பாய்.	....	3	0
547	,,	A. V. நரஸிம்ஹன், மதுராந்தகம்.	....	1	8
556	,,	K. V. ஸந்தானகோபாலாசாரியர், கத்வால்.	....	1	8
597	,,	S. M. ஸ்ரீநிவாஸாசாரியர், சோகத்தூர்.	....	3	0
643	,,	K. ஸுந்தரராஜய்யங்கார், மதராஸ்.	....	3	0
704	S.	சடகோபையங்கார், கும்பகோணம்.	....	3	0
738	,,	P. R. ரங்கஸாமி அய்யங்கார், கோவை.	....	3	0
739	,,	G. நரஸிம்மய்யங்கார், ஜம்ஷட்பூர்.	....	3	0
741	,,	A. V. ராஜகோபலய்யங்கார், ஸெகந்தராபாத்.	....	3	0
742	,,	R. கிருஷ்ணன், சித்தூர்.	....	3	0
	,,	M. N. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், செங்நெல்மானியம்.	....	5	0
	,,	R. ஸ்ரீநிவாஸ கோபாலாசாரியர், புதுக்கோட்டை.	....	3	0
			ஆக ரூ.	63	0

ஸ்ரீயை நமः

ஸ்ரீ ஸ்துதி

[ஸ்ரீமதி. கௌஸல்யா, திருவல்லிக்கேணி.]

(1) 'மாநாதீத' என்கிற முதலாவது ச்லோகத்தினால் ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ தேவியைத் தாம் சரணமாக அடைவதன்றி, ஸ்ரீ லக்ஷ்மியின் பெருமையையும் வர்ணிக்கிறார்.

மானவர் மனமதால் மதிக்கொணா மகிமையோம் மங்களத்திற் கரசியே
தானவர் மதுவைச யித்தவன் மார்பினில் தங்கியும லங்கரிப்போய்
ஆனநல் லிடமிரண் டினுமுனை யடைந்தவரி னனந்த மூர்த்தியானேய்
நானுனை கதிவேறி லாதடை கின்றனன் நலமோங்கு சீதேவியே.

(2) 'ஆவிர்ப்பாவ' என்கிற இரண்டாவது ச்லோகத்தில், ஸ்ரீ தேவியின் பிறப்பு, இருப்பு, ஆளுகை, இவைகளின் மஹிமையைத் தெரிவித்த இத்தகையவளை ஸ்துதிக்கத் தம்மால் ஸாத்ய மாகா தென்கிறார்.

எவளுடைப் பிறப்பிடம் பாற்கடலு மின்றியே எழில்யாக பூமியாமோ
எவளுடை யிருப்பிடம் மாலின்திரு மார்போடு ஏற்றதோர் கமலமாமோ
எவளுடைய பெருநிதிய மீரேழு வுலகோடு ஈடற்ற வீடதாமோ
அவளுடை மகிமையை அற்பவறி வுள்ளயான் அறிந்துமே புகழவாமோ.

(3) 'ஸ்தோதவ்யத்வம்' எனும் இம் மூன்றாம் ச்லோகத்தில், அப்படித் துதிப்பதற்கும் அத்தேவியின் கடாக்ஷம் அவசிய மென்றும், அப்படித் தேவியின் கடாக்ஷத்தால் ஸ்தோத்ரம் செய்யவேண்டு மென்கிற விருப்பம் உண்டான மாத்ரத்திலேயே, தாங்களே மற்றவர்களால் ஸ்துதிக்கப்படும் மேம்பதவியை அவர்கள் அடைந்துவிடுகிறார்க ளென்று, சாஸ்த்ர ரீதியை யொட்டித் தம் மனத்திற்கே ஆரம்பித்த காரியத்தில் ஊக்க முண்டாகும்படி செய்கிறார்.

உன்னையே ஏத்திடுநல் லுள்ளமுடை யோரைநீ உலகுபோற் றவுஞ் [செய்கிறாய்
அன்னையே யத்தகைய யுனைவேறு கதியின்றி யடைவதில் வெற்றி [யுறுவேன்
தன்னையே யுன்பாத சேவைதனி லீடுபடத் தந்திடு மனத் தவர்க்கே
முன்னையே யழிவற்ற வானந்தங் கிட்டிடவு முழுதுமாம் மங்களங்கள்.

(4) 'யத்ஸங்கல்பாத்' என்ற இந்த ச்லோகத்தால், முத்தொழில்களுக்கும் கர்த்தாவான பகவானை, ஸ்ரீ தேவியின் இருப்பாகிய அடையாளத்தைக் கொண்டே அறிந்துகொள்ளலா மென்கிறார்.

உலகுறு சராசரம துடலாகக் கொண்டுதன் னுள்ளமதி லெண்ணியவுடன்
இலகுமுத் தொழிலுமோ யேற்றுசுப மோங்கிடவு மீடில்யோ கியர்
[மனத்தே
விலகிடா தென்றுமே விறுமொளி யோன்மார்பம் விளக்கவரி தாங்
[கமலையுன்
னலகிலா வெழிலுடை யடிமலரி னடையாள மணியாகக் கொண்டுள்ளதே.

(5) 'நிஷ்ப்ரத்யூஹ ப்ரணய கடிதம்' எனும் 5-வது ச்லோகம்:— எங்கெங்கும் எக்காலும் இணைபிரியாது ஈருடல் ஒருயிராய் விளங்கும் இத் தம்பதிகள் மனமகிழ்வுடன் விளையாடு மிடம், ம்ருதுவான ஆதிசேஷனும், வேதங்களின் முடியில் விளங்கும் உபநிஷத்துக்களும், ஸத்துக்களினுடைய மனமுமே என்பதை வர்ணிக்கிறார்.

என்றுமே பிரிவுறு திலகிரண் டுடலினே யணைத்தவோ ருயிர்போன்றநீர்
போன்றிடா நாரணன் போலவே யுலகிற்குப் புகழுநா யகியாகிறாய்
நன்றுநீ ரிருவருங் கூடிவிளை யாடுமிடம் நலமோங்கு பாம்பணையுமே
வென்றநல் யோகியர்த முள்ளமொடு வேதத்தில் விளங்குநல் முடியதாமே.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

வ்யய ஹூ கார்த்திகை மீ

1௳	சனிக்கிழமை	...	சூந்ய திதி. வ்ருச்சிக ரவி 13-0
4௳	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
8௳	சனிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
20௳	வியாழக்கிழமை	...	ஸர்வ (கைசிக) ஏகாதசி வ்ரதம்
22௳	சனிக்கிழமை	...	ஸ்ரீ திருமங்கை மன்னன் திருநக்ஷத்ரம்
23௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வாலய தீபம்: ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம் * சந்த்ர க்ரஹணம்
26௳	புதன்கிழமை	...	வ்ருச்சிக க்ருஷ்ண த்ருதீயை திதி
27௳	வியாழக்கிழமை	...	வ்ருச்சிக க்ருஷ்ண சதுர்த்தி-பஞ்சமி திதி த்வயம்
28௳	வெள்ளிக்கிழமை	...	ஷஷ்டி திதி
29௳	சனிக்கிழமை	...	ஸப்தமி திதி
30௳	ஞாயிற்றுக்கிழமை	...	வ்ருச்சிக-சாப க்ருஷ்ணாஷ்டமி திதி: சாபரவி: 43-24 (மறுநாள் தர்ப்பணம்)

---

* சந்த்ர க்ரஹணம்:—கார்த்திகைமீ 23௳ (8—12—46) ஞாயிற்றுக்கிழமை (பௌர்ணமி திதி ரோஹிணி நக்ஷத்ரத்தில்) பூர்ண சந்த்ர க்ரஹணம். க்ரஹணம் கொஞ்சம் குறைய ஒன்றே மூன்று வீசம். அன்று பகல் 12-40 மணிக்குள் போஜநமும், பூர்ணிமா திதி ச்ராத்தத்தை மறுநாளும் பண்ணவேண்டும்.

		ம.	நி.
ஸ்பர்சம்	...	9	40
மத்யம் ...	...	11	18
மோக்ஷம் ...	...	12	56
	ஆக:	3	16

ஸ்ரீ:

செய்திகள்

'மத்பக்த' சப்தார்த்த விவரணம்

[வித்வான் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்]

'மத்பக்தா யாந்தி மாமபி' என்பதற்கு வ்யாக்யாநமாக அவதரித்துள்ள பாஷ்யத்தில் பலாந்தர ஸங்கிகளை விலக்குவதாகக் கொண்டு ஸந்தேஹ மொன்றை நம் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி ஆவிஷ்கரித்திருக்கிறார். அதற்குப் பரிஹாரத்தை விஜ்ஞாபநம் செய்துகொள்கிறேன்.

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]'

என்பதாக இங்குள்ள கீதாபாஷ்யம். இதில் ஆர்த்தன் ஜிஜ்ஞாஸு அர்த்தார்த்தீ ஆகிய மூவரையும் விலக்கியதாகக் கொள்ளவேண்டிய தில்லை. அவ்வதிகாரிகளும் காலக்ரமத்தில் தாம்பற்றிய பலாந்தர ஸங்கம் தவிர்ந்து, பகவத் ப்ரீணநத்தையே பலமாகக்கொண்டு ஜ்ஞாநிகளாகி, எம்பெருமானை அடைந்து அபுநராவ்ருத்தியை அடைகிறார்கள் என்பதே பாஷ்யத்தின் நோக்கு.

இதுதன்னையே தாத்பர்ய சந்த்ரிகையிலும், ஸ்ரீ நாராயணார்ய வ்யாக்யாநத்தையும் சாண்டில்ய ஸம்ஹிதையையும் உதாஹரித்து விவரணம் செய்திருக்கிறார். பலாந்தரம் தன்னையும், 'உன்னை லல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்' என்கிறபடியிலே எம்பெருமானிடமே பெறுதல்வேண்டும் என்று நியதர்களால் செய்யப்படும் பக்தியானது, க்ரமேண தீவ்ர ஸம்வேகாதி மூலகமான ஸ்வயம் ப்ரயோஜந பக்தியை உண்டுபண்ணி, தத்வாரா மோக்ஷபர்யந்தமே ஆகிறது என்பதாக சாண்டில்ய ஸம்ஹிதையிலும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே கீதாபாஷ்யத்துக்கும் அது பொருளாகலாம். பாஷ்யத்தில் '[illegible]' என்று நிர்த்தேசியாமையால் நாளடைவில் ஜ்ஞாந வைராக்யாதி மூலமான பக்தியை அநுஷ்டித்து, பலாந்தரார்த்திகளும் மோக்ஷம் பெறுகிறார்கள். ஜ்ஞாநிகளோ அந்த பக்தியினாலேயே அதை அடைகிறார்கள் என்று கொள்வது உசிதம். 'ந ஜாது ஹீயதே' என்கிற அஞ்ஜலி வைபவம் இங்கு அநுஸந்தேயம்.

அபயப்ரதாந ஸாரத்திலே "விபீஷணன் ஐச்வர்யார்த்தியானாலும் '[illegible]' '[illegible]' என்கிற பொதுவான பாசுரங்களாலே சரண்யாபிப்ராயத்தைப் பார்த்தால், ப்ரபத்தியானது ஸாமாந்யேந மோக்ஷபர்யந்த ஸகல புருஷார்த்த ஸாதந மென்னுமிடம் தெளியலாம்" என்ற ந்யாயம் பக்தன் விஷயத்திலும் துல்யமானதே யன்றோ? ஆகவே, சதுர்வித பக்தருமே 'மத்பக்தா:' என்கிறதன் பாஷ்யத்தில் விவக்ஷிதம் என்பது பொருத்தமுள்ளது.

(2)

[வித்வான் கருடபுரம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]

வ்யயவூ புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையில் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி கீதாபாஷ்யத்தில் 'மத்பக்தா' விஷயமாக ஒரு ஸந்தேஹத்தை வெளியிட்டிருந்தார். அதைப்பற்றிக் கிஞ்சித் விஜ்ஞாபிக்கவேண்டிய ஒரு விஷயத்தை யதாமதி எழுதுகிறேன்.

இந்த ப்ரகரணத்தில் இந்த்ராதி தேவர்களையே யஜித்தவர்கள் பகவத் ப்ரஸாதத்தாலே கிடைத்த பலத்தை அடைகிறார்களென்று 'மயைவ விஹிதாந் ஹி தாந்' என்பதால் சொல்லப்பட்டுள்ளது. "அப்படியானால் பகவது பாஸகர்களும் பகவத்பல போக்தாக்க ளு

கையால், அவர்களைக் காட்டிலும் தேவதாந்தர யாஜிகளுக்கு என்ன தாழ்வு? இவர்களைக் காட்டிலும் அவர்களுக்குத்தான் ஏற்றம் ஏது?'' என்னும் இச்சங்கையைப் பரிஹரிப்பதற்காக 'அந்தவத்து ஃபலம் தேஷாம்' என்று தேவதாந்தர யாஜிகளுடைய பலம் நச்வரம், ஏனெனில்: அவர்களுக்கு இந்த்ராதி ஸாயுஜ்யமே பலமாகையால், இந்த்ராதிகளுடைய போகமும் அந்தவத்தாகையால், தத்ஸமாந போகத்வம் இவர்களுக்கு எப்படி நித்யமாகும். மென்னும் அபிப்ராயத்தால் அருளிச்செய்து, 'மத்பக்தா யாந்தி மாமபி' என்று ஸ்வபக்தர்களுக்கு ஸ்வஸாயுஜ்யம் பலமாகையாலும் ஸ்வபோகம் நித்யமாகையாலும் ஸ்வபக்தர்களுக்கும் அது நித்யமாகவே யிருக்கிறது என்னும் திருவுள்ளத்தால் ஸாதித்திருப்பதால், இந்த்ராதி யஜநத்துக்கும் இந்த்ராதி ப்ராப்திக்கும் ஸாதந ஸாத்ய பாவம்போல் இந்தப் பகவத் பக்திக்கும் பகவத் ப்ராப்திக்கும் ஸாதந ஸாத்யபாவம் ஏற்படுகிறபடியால், தாத்ருஶ மோக்ஷ ஸாதந பக்தி அநபிஸம்ஹித பல கர்மாங்ககமாகவே சாஸ்த்ர ஸித்தமாகையால், 'பக்த' பதம் ஸர்வ ஸாதாரண மானாலும், இங்கு ஜ்ஞாநிபரமாகவே ஸங்கோசிக்க வேண்டிற்று. ப்ரயோஜநாந்தரமான ஐச்வர்ய கைவல்ய பரரையும் இந்த 'பக்த' சப்தத்தால் க்ரோடீகரித்தால், அவர்களுடைய பலமும் அந்தவத்தாகையால், தேவயாஜிகளுடைய பலமாத்ரத்துக்கு அந்தவத்வம் சொன்னது சேராது. மேலும்: 'மத்பக்தா:' என்கிறது, சதுர்வித பக்த பரமானால், 'யாந்தி மாம்' என்கிறதும் ஸங்கதமாகாது. ஐச்வர்ய கைவல்யங்களிறே அவர்கள் அடைகிற பலம். கீதாபாஷ்யத்திலும் ஸ்வாமி ஜ்ஞாநிபரமாகவே யோஜித்தபடி. தாத்பர்ய சந்த்ரிகையில் 'ஸம்ஸாரிணாம் ஜ்ஞாநாதி வைஷம்யேऽபி' என்று உபக்ரமித்து தத்வாக்யாநுவாதமும் சாண்டில்ய ஸம்ஹிதையில் 'ஸம்ஸாரம் ....மத்பக்தா யாந்தி மாமபி' என்று ப்ரமாண வசநம் உதாஹரித்ததும் வஸ்துஸ்திதியை ப்ரதர்சிப்பித்தபடி. இந்த 'பக்த' பதத்தால் அவர்களை ஸங்க்ரஹிப்பதில் நோக்கன்று. அப்படியானல் 'த்வத்பக்தா யாந்தி மாமபி' என்று ஒரு வாக்யம் ஸாதித்திருக்கலாம். பகவதி பலாந்தரார்த்தம் பக்தி பண்ணினலும் தேவதாந்தர யாஜிகளுக்குப்போல் ஸ்வப்ரார்த்தித க்ஷுத்ர பலத்தோடு விச்ரமியாமல் விஷய ஸ்வபாவத்தால் ஸத்வோத்ரேகம் உண்டாய், சிரகாலம் கழித்தாவது அநந்ய ப்ரயோஜந பக்த்யந்த வைராக்ய ஜ்ஞாநங்களை உண்டுபண்ணி, பரபக்தி ப்ரவேஶந த்வாரா மோக்ஷபர்யந்தமாகும் என்று சாஸ்த்ரம் இருப்பதால், அவர்களுக்கும் யதா கதாசித் மோக்ஷம் வருகிறபடியால், பகவத் பக்தர்கள் ஸர்வருக்கும் பல நித்யதைக்கு விரோதமில்லை யென்று நாராயணர்ய ஸூக்தியிருந்தாலும், அது ப்ரகரண ஸங்கதமாகுமா? தேவதாந்தர யாஜிகளுக்கு சீக்ரம் ஸித்திப்பதுபோல், மத்பக்தர்களுக்கும் மத்ப்ராப்தி அவ்யவதாநேந ப்ராரப்தாவஸாநத்திலேயே வருகிற தென்பது ஸித்தம் என்று திருவுள்ளம்பற்றி 'மாமபி' என்கிற 'அபி' சப்தத்தைப் பிந்ந க்ரமமாக 'மத்பக்தா அபி' இதி பாஷிதம்.

ஆகையால் இந்த 'பக்த' பதம் ஜ்ஞாநிமாத்ரத்தையே குறிக்கிற தென்று திருவுள்ளம். அப்படி ஏதேனும் ஒரு காலத்தில் பகவத் ப்ரயோஜநாந்தரார்த்த பக்தருக்கும் மோக்ஷம் கைகூடுதலைப்பற்றிப் பகவத் பக்தர்கள் எல்லோர்க்கும் பலம் நித்யமென்று சொன்னல், 'மற்ற மூவரும் ஸ்வஸ்வ பலாநுபவத்திலிருந்தும் நழுவி விடுகிறார்கள்; ஜ்ஞாநி ஒருவனே மோக்ஷத்தை அடைகிறான்' என்கிற கீதாசார்ய வசநம் எப்படி ஸங்கதமாகும்? ஆகையால் இங்கு 'யாந்தி மாம்' என்கிறது அவ்யவதாநேந மோக்ஷத்தை விவக்ஷிக்கிற தாகையால், தத்ஸாதந பக்தியோக நிஷ்டர்களையே 'மத்பக்தர்' என்கிறது. இங்கு 'யாந்தி மாம்' என்கிறதை அநுஸரித்து, 'பக்த' பதம் ஜ்ஞாநிபரமாக வ்யாக்யாதமாகையால், 'இதரே' என்ற பாஷ்யபதம் ஆர்த்தன் முதலிய மூவரைக் குறிப்பிடுகிற தென்ற ப்ரமம் ஜநியாமைக்காகவே 'அந்தவத்வ ஸாக்ஷாத் ப்ரதிஸம்பந்தி' என்று சந்த்ரிகையில் வ்யாக்யாதமாயிற்று. ஆகையால் அதைக்கொண்டு இந்தப் பதம் ஸர்வ பக்த ஸாதாரணமாகாது என்பது ஸித்தம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே பரபுருஷாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இன்னமும் திருவெவ்வுளூரிலேயே எழுந்தருளியிருக்கிறான். 'நடந்த கால்கள் நொந்தவோ' என்று நாலைந்து வர்ஷ காலங்களாகத் தேஶாத் தேஶம் ஸஞ்சரித்த ச்ரமத்தால் திருவடிகள் நொந்துவிட்டனவோ என்னவோ? அவனுக்கு ஜ்ஞாநம் பலம் முதலியவை ஸ்வாபாவிகமே. இருந்தாலும், அவதார தஶையில் ஒரு விதமான அபிநயம் அவனுக்கு உண்டாகையால், ப்ராக்ருதத்தில் கொஞ்சம் மநுஷ்ய பாவனையை அபிநயிப்பதும் உபபந்நமே. ச்ரமம் பரிஹ்ருதமானவுடன், இதுபர்யந்தம் ஸஞ்சரிக்கப்படாமலிருக்கும் ஸ்தலங்களுக்கு எழுந்தருளி, அவ்விடங்களில் தனது ஸேவையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஆச்ரிதர்களை அநுக்ரஹிப்பன் என்றே நாம் நம்புகிறோம். அவனை ஆராதித்துவரும் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் விச்ரமம் அபேக்ஷிதம்தான். ஆதலின் ஸஞ்சாரத்திலிருந்து ஸ்வல்ப காலமாவது ஸ்ரீ ஸ்வாமிக்கு ஓய்வு நேர்வது ஆநுகூல்யத்தின் பொருட்டேயாகும். ஆனால் இந்த விச்ராந்தி ஸஞ்சார ப்ரயுக்தமான ச்ரமத்தை மாத்ரம் பரிஹரிக்குமேயொழிய, ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய விபூதியின் பரிபாலந வ்யாபாரத்தால் ஸம்பவிக்கும் க்லேஶங்களைப் பரிஹரிக்கமாட்டாது. இந்த க்லேஶங்கள் யாவும் ஸ்ரீ ஶரண்யனுடைய கைங்கர்யத்தில் பர்யவஸாநம் பெறுகிறபடியால் அந்தக் கைங்கர்யம்போல இவையும் போக்யங்களேயாகுமென்பதில் ஆக்ஷேப மில்லை. ஸ்ரீ ஸ்வாமி இந்த க்லேஶங்களால் ஸ்வல்பமேனும் பீடிக்கப்படாமல், பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்க வேண்டுமென்பதே நமது ப்ரார்த்தனை.

* * *

தேஶத்தில் அராஜக ஸ்திதி

சென்ற ஒரு மாஸ காலமாக வங்காளத்திலும் மற்றும் சில உத்தர ராஜதாநிகளிலும், ஹிந்துக்களுக்கும் துருஷ்கர்களுக்கும் கேவலம் ஜாதிப்ரயுக்தமாகப் பரஸ்பரம் த்வேஷம் உண்டாகி, அது காரணமாய் வெறி பிடித்தவர்கள்போல் ஜநங்கள் ஒருவரை ஒருவர் மாய்த்துக் கொள்வதாகப் பத்ரிகைகளிலிருந்து நாம் அறிகிறோம். சென்ற அக்டோபர் மாஸம் 16உ யன்று அந்தக் கலஹம் கல்கத்தா நகரத்தில் ஆரம்பித்தது. அப்பொழுது நாலைந்து திநங்கள் அங்கு நடந்த அட்டூழியங்கள் வாசாமகோசரம். ஶிஶுக்கள் ஸ்த்ரீகள் வ்ருத்தர்

கள் என்பதைக் கொஞ்சமேனும் பாராட்டாமல், கண்ணில் கண்ட மாத்ரத்தில் ஒருவரை ஒருவர் கத்தியால் குத்தியும், கழுத்தை முறித்தும், வீடுகளைத் தீக்கு இரையாக்கியும் இப்பாதிரி காட்டு ம்ருகங்கள்போல ஜனங்கள் நடந்து வந்தார்கள். இப்படிக் கொஞ்ச காலம் அராஜகமாகவே இருந்து, பிறகு ஸ்வயமாகவே இந்த க்ஷோபம் கொஞ்சம் குறைவடைந்து வந்தது. இங்கு மங்கும் சிற்சில காலாடிகள் ஒளிந்திருந்து வழிப்போக்கர்களைத் தாக்குவதாக மாத்ரம் ஸமாசாரம் வந்துகொண்டிருந்தது. இந்தக் கலஹ காலத்தில் கணக்கற்ற ஸ்த்ரீகள் தூக்கிக்கொண்டு போகப்பட்டார்களாம்; நிர்ப்பந்தித்து மதம் மாற்றப்பட்டதுடன், அவர்கள் புநர் விவாஹமும் செய்யப்பட்டார்களாம். சில தினங்களுக்குமுன் இந்தக் கலஹம் கல்கத்தாவுக்கு ஸமீபத்திலுள்ள நவகாளி திப்பிரா முதலிய ஜில்லாக்களிலும் பரவி, க்ராமம க்ராமமாக அநேக ஸ்தலங்கள் பாழாக்கப்பட்டனவாம். இப்பொழுது நாலைந்து தினங்களாகப் பீஹார் ராஜதானியில் அத்யுக்ரமாக இந்த ஸம்பவம் நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறோம். கவர்னர் வைஸ்ராய் முதலியவர்கள் இந்த ஸ்தலங்களுக்குப் போய்ப் பார்த்தும், ஜனங்கள் கட்டுக்கு அடங்காமல் மீறி மனம் போன மார்க்கத்திலேயே போய்க்கொண்டிருக்கிறார்களாம். டில்லியிலிருந்து முக்ய மந்த்ரிகளெல்லாரும் அந்த ஸ்தல மெங்கும் ஸஞ்சரித்துக் கலஹத்தை அடக்க முயற்சிப்பதாகவும், ஜனங்களுக்கு நல் வார்த்தைகளைச் சொல்லி வருவதாகவும் சொல்லுகிறார்கள். மஹாத்மா காந்தி இந்தக் கலஹம் அடங்காவிட்டால், உபவாஸத்தால் தாம் உயிரைத் துறப்பதாக வ்ரதம் கொள்வதாகச் சொல்லுகிறாராம். மநுஷ்யத்தன்மையே தூர விலகி, ராக்ஷஸ ஸ்வபாவம் உன்மஸ்தகமாக நிற்கும் காலத்தில் நல்ல வார்த்தைகளும் உபதேசங்களும் என்ன பயனை அளிக்கும்? இப்படி இவ்விடங்களில் இருப்பதைப் பார்த்து, பம்பாய் பூனா அலஹாபாத் முதலிய இடங்களிலுள்ள சில துஷ்டர்களும் கையில் கத்தியை வைத்துக்கொண்டு, எதிர்ப்படுகிறவர்களையெல்லாம் துண்டு துண்டாக வெட்டிப்போடுகிறார்களாம். ப்ரளய காலம் வந்துவிட்டதோ வென்று நினைக்கும்படியாக இருக்கிறது. பகவத் ஸங்கல்பம் இவ்வாறு ஜனங்கள் நசிக்கவேண்டுமென்று இருந்தால், எவரால் அதைத் தடுக்க முடியும்? எவ்வித குற்றத்தையும் அறியாத ஸாது ஜனங்கள் கஷ்டப்படுவதைப் பார்த்தால் மநஸ் தவிக்கிறது. ஸ்ரீ ஶரண்யனே கதி.

* * *

ஒரு நல் வார்த்தை

நம்முடைய ஶரீரத்தை நாம் ப்ரீதியுடன் பெரியதொரு உயர்ந்த பொருளாகக் கொண்டாடுகிறோம். இதை ஒரு ப்ரம மென்றே அதன் உண்மையை அறிந்தவர்க ளெல்லாரும் உறுதிமொழி கூறியிருக்கிறார்கள். இதைப் பற்றி ஈட்டில் பின்வருமாறு ரஸவத்தான திவ்ய ஸூக்தி ஒன்று காணப்படுகிறது. "கவிழ்ந்து பார்க்கவமையுமே இதனுடைய அகவாயை [உள்ளிருக்கும் தோஷங்களை]; தன்னடையே விரக்தி பிறக்குமே. இப்படி ப்ரத்யக்ஷிக்கச் செய்தேயும், கார்யகரமாகாதிருக்கிறதிறே வாஸநையின் கநம். ஒரு செட்டியை, 'இவர் தமிழுக்குத் தேஶிகனாயிருக்கும்' என்று பட்டருக்குக் காட்டினார்களாய், 'உனக்கு ஏதேனும் அபேக்ஷை யுண்டாகில் கேட்கலாகாதோ!' என்ன, சிலர், காண்கிற

தேஹத்துக்கு அவ்வருக்கு ஆத்மா வில்லை என்னு நின்றூர்கள். சிலர், இத்தேஹந் தான் அஸ்திரமென்று இதன் தோஷத்தைத் தர்ஸித்து, அவ்வாகை ஸ்திரமா யிருப்ப தொன்றைப் பற்றவேணுமென் றிராநின்றூர்கள். விஷய மொன்று யிருக்க, இவ்விரண்டு பேர் மாற்றமும் நடக்கிறபடி யெங்ஙனே? என்ன, 'உஉஊயா உ-ஈ-ர தூயா' என்று சொல்லுகிறபடியே, பாக்யவான்களுக்கு இதி னுடைய தோஷ தர்ஸநத்தைப் பண்ணிக் கழித்துக் கொள்கைக்கும், பாக்ய ஹீநர்க்கு இதிலே போக்யதா புத்தி பண்ணி அநர்த்தப்படுகைக்கும் உட லாம்படி கர்மாநுகுணமாக இத்தை இடையெடுத்து [நிறுத்து]க் காணும் ஈச்வரன் பண்ணிற்று" என்றருளிச் செய்தார்.

மஹா பாரதத்திலும் இந்த விஷயம் மிகவும் அழகாக விவரிக்கப்பட் டிருக்கிறது.

"யதி நாஊஸ்ூ காயஸ்ூ யஉ ஜூஉ ஹிஷூவெக ।
ஷொகொ உயம் உ ஜூஊஷாய ஸு-ந: காகாம்ஷு வாரயெக ॥"

[உள்ளிருக்கும் மாம்ஸம் மாத்ரம் வெளியில் வைக்கப்பட்டு இந்தத் தேஹம் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தால், நம்மேல் நாயும் காக்கையும் விழாமல் இருப்பதற்கு நாம் எப்பொழுதும் கொம்பும் கையுமாக நின்றுகொண்டே யிருக்கவேண்டு மன்றோ ?]

நாலடியார் என்னும் தமிழ்நூலினும்,

" மாக்கேழ் மடநல்லாய்! என்றரற்றும் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலே—யாக்கைக்கோர்
ஈச்சிற(கு) அன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்."

[' இளமை ஒளி அழகு நற்குணம் முதலியவைகள் நிரம்பியுள்ள பெண்ணே!' என்று சில பெரியோர்கள் எப்பொழுதும் அரற்றிக் கொண்டிருக்கிறூர்களே! அவர்கள் இந்த அல்பமான சரீரத்தைக் கொஞ்சம் ஊன்றிப் பார்க்க மாட்டார் களோ? ஊன்றிப் பார்த்தால் உண்மை நன்றுக விளங்கும். இந்த சரீரத்தில் ஓர் ஈயின் சிறகளவு தோல் நீங்கி, அதனுல் ஒரு வ்ரணம் உண்டானுலும், அந்த வ்ரணத்தைக் குத்துவதற்கு வரும் காக்கையை அடித்து ஓட்டுவதற்கு ஒரு கொம்பு வேண்டியிருக்குமே!] என்று பாரத வாக்யத்தின் கருத்து விளக்கப்பட் டிருத்தல் நோக்கத்தக்கது. [இங்கு ஸ்த்ரீகளை விரும்பிப் புகழ்கிற மதியீனர் களைச் 'சான்றவர்' (பெரியோர்கள்) என்றது விபரீத லக்ஷணை.]

ஸ்ரீ ஆசார்ய ஹ்ருதயம்

ஸ்ரீ பிள்ளை யுலகாசிரியரின் திருத்தம்பியாரான ஸ்ரீ அழகியமணவாளப் பெருமாள் நாயனுர் அருளிச்செய்த 'ஆசார்ய ஹ்ருதயம்' என்னும் க்ரந்தத் துக்கு, ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி 'தாத்பர்ய ஸாரம்' என்னும் உரையுடன் அந்த க்ரந் தத்தை ஒரு புஸ்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறூர். அதில் ஒரு ப்ரதியை நமக்கு அனுப்பி, 'உசிதமானல் இதை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையில் விமர்ஸிக்கவேண்டும்' என்று நியமித்து மிருக்கிறூர்.

அந்த நியமநத்தை அநுஸரித்து, நாம் அதைப்பற்றி இவ்விடத்தில் சிறிது ப்ரஸ்தாவிக்கிறோம். தென்னாசார்யஸம்ப்ரதாயத்துக்கு அணிவிளக்கென அவதரித்துள்ள க்ரந்தங்களுள் இது ஓர் உத்தமமான க்ரந்தம். ஆனால் அது சுத்தமாக இது பர்யந்தம் அச்சுப் பதிப்பிக்கப்படவில்லை யென்றும், அதை நல்ல பாடங்களுடன் இப்பொழுது தாம் அதை வெளியிட்டிருப்பதாகவும் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி தாம் எழுதியுள்ள முகவுரையில் ஸாதித்திருக்கிறார். இவர் இட்டருளிய வ்யாக்யாநமும் இனிதாகவே இருக்கவேண்டுமென்றே இவருடைய யோக்யதையை அறிந்துள்ள நாம் நம்புகிறோம். இதன் விலை ரூ. 1-10-0. இதனை அபேக்ஷிப்பவர்கள், "க்ரந்தமாலா ஆபீஸ், சின்ன காஞ்சீபுரம்,' என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சந்தாதாரர்கட்கு ஒரு விஜ்ஞாபநம்.

1946-ம் வர்ஷம் பிறந்து 10-மாதங்களாகியும், சிலர் இன்னும் தமது சந்தாத் தொகையை (ரூ. 3.) செலுத்தாதிருக்கின்றனர். மற்றும் சிலர், இவ் வர்ஷத்தோடு சென்ற வர்ஷத்துக்கும் உரிய சந்தாப் பணம் (ரூ. 2) செலுத்தாது பாக்கி வைத்துக்கொண் டிருக்கின்றனர். இவர்கள் யாவரும் பாக்கி யில்லாமல் தமது சந்தாத் தொகைகளை இந்த நவம்பர் மாஸம் முடிவுக்குள் செலுத்திவிடவேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கப் படுகிறார்கள். அப்படிச் செலுத்தாத பக்ஷத்தில், அவர்கட்கு ஸஞ்சிகை அனுப்புவதை நிறுத்திக்கொள்ளும்படி ஸம்பவிக்கும்.

ஸம்பாதகர்

Regd. M. No. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	ரூ. அ. ப. மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. உக்தி நிஷ்டபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12—0	1—0—0
3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் („)	0—8—0	0–12—0
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
5 .ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0–12—0
6. ஸ்ரீ வீரராக்வஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

“மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**
5, நெ. ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை,”
என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.